# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.
# S.C. 122/2024
## Prosecution Witness : 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பழனிச்சாமி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. முத்து** | **Calling** | : | **கூலி வேலை** |
| **Village** | : | **கல்லுப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **63** |
| | | | **Dated** | : | **20.01.2026** |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), **திரு. பழனிச்சாமி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். நான் வேலை பார்க்கும் இடத்திற்கு போவதற்காக திண்டுக்கல் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டு இருந்தபோது போலீசார் என்னிடம் ஒரு கையொப்பம் கேட்டார்கள், நான் போட்டுக் கொடுத்தேன். எதற்காக கையொப்பம் செய்தேன் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. எதிரியைப் பற்றியோ, இந்த வழக்கை பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

கடந்த 11.05.2018ம் தேதி மதியம் 01.00 மணிக்கு வீட்டிற்கு தேவையான சாமான்கள் வாங்க திண்டுக்கல், கச்சேரி தெரு சந்திப்பில் நான் நின்று கொண்டு இருந்தபோது, இந்த வழக்கின் எதிரி தான் பெரிய ரவுடி என்று என்னை மிரட்டினார் என்றும், என்னிடம் மாமூல் கேட்டதற்கு என்னிடம் பணம் இல்லை என்று சொன்னேன் என்றும், உடனே எதிரி தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி என் சட்டைப் பையில் இருந்த பணம் ரூ. 500/- ஐ எடுத்துக் கொண்டார் என்றும், அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் உதவிக்கு ஓடிவர, எதிரி ரவி என்ற முட்டைக்கண் ரவி கத்தியை அங்கும் இங்கும் சுழற்றி யாராவது பிடிக்க வந்தால் கத்தியால் குத்தி கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகவும், அங்கிருந்த பொதுமக்களும், அந்த வழியாக வந்த வாகன ஓட்டிகளும் சிதறி ஓடிவிட்டனர் என்றும், கடைக்காரர்கள் கடையை அடித்தார்கள் என்றும், இதனால் போக்குவரத்து ஸ்தம்பித்தது என்றும், அதைப் பயன்படுத்தி எதிரி பணத்துடம் தப்பி ஓடிவிட்டார் என்றும், இது சம்மந்தமாக எதிரி மீது நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு, தற்போது உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 20.01.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.01.20 15:19:14 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.